**மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்**
முன்னிலை - திரு ஆ.மணிமொழி, பி.எ, எல்எல்.பி.,
அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 08-ம் நாள் திங்கள்கிழமை
ஹேவிளம்பி வருடம் சித்திரை திங்கள் 25-ம் நாள்

**அமர்வு வழக்கு எண்.193/2016**

(கோவை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 முன்னுரிமை பதிவு வழக்கு எண்.23/2016)
பி-2, ஆர்.எஸ்.புரம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம் குற்ற எண்.113/2016

WEB COPY

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையிடுபவர் | : | காவல் உதவி ஆணையர், சட்டம் மற்றும் ஒழுங்கு [மேற்கு], கோவை மாநகர். |
| 2. | எதிரிகளின் பெயர் | : | 1. ஆனந்த கண்ணன் (32/2016), த/பெ. சேகர், 120-E, காந்திஜி நகர், சீரநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்.<br>2. சாவித்திரி (49/2016), க/பெ. சேகர், 121-E, காந்திஜி நகர், சீரநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்.<br>3. சேகர் (54/2016), த/பெ. சண்முகம், 121-E, காந்திஜி நகர், சீரநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். |
| 3. | குற்றச்சாட்டு | : | எதிரிகள் 1 முதல் 3 மீது பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய |

| | | | |
|---|---|---|---|
| | | | தண்டனைச் சட்டத்தின் கீழ் |
| 4. | எதிரிகளின் பதில் | : | பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் இல்லை |
| 5. | நீதிபதியின் முடிவு | : | பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது. |
| 6. | தீர்ப்பு | : | முடிவாக, அரசு தரப்பில் எதிரிகள் 1 முதல் 3 மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள், எந்தவொரு தகுநிலை ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி நிருபிக்கப்படவில்லை என முடிவு செய்து, 1 முதல் 3 எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1 முதல் 3 எதிரிகளை அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து கு.வி.மு.ச. 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் பி.ஆர்.எண். 25/2016-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குச் சொத்தான சா.பொ.1 மஞ்சள் நிற சாணிப்பவுடர் கறையுடன்கூடிய சில்வர் (Stainless Steel) செம்பு ஒன்று, சா.பொ.2 சிறிய பிளாஸ்டிக் கவரில் பாதி அளவு உள்ள மஞ்சள்நிற சாணிப்பவுடர், ஆகியவற்றை மேல் |

WEB COPY

| | | | |
|---|---|---|---|
| | | | முறையீட்டுக் காலத்திற்குப் பின் அழிக்கவும் அல்லது மேல் முறையீடு இருப்பின் அதன் முடிவிற்கேற்ப செயல்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது 29.04.2017 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்ததில் அரசு தரப்பில் திருமதி ஆர் சரோஜினி, கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சகாபுதீன் அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

WEB COPY

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத்தரப்பு வழக்கு:-</u>**

[1] (1)சாட்சி.1 மாணிக்கம் மற்றும் அவர் மனைவி சாட்சி.2 வத்சலா ஆகியோரின் மகள் காளீஸ்வரி ஆவார். காளீஸ்வரிக்கும் 1-ம் எதிரி ஆனந்தகண்ணன் என்பவருக்கும் இடையில் 02.03.2015 அன்று திருமணம் நடைபெற்றது. 1-ம் எதிரியின் தயார் 2-ம் எதிரி சாவித்திரி. 1-ம் எதிரியின் தந்தை 3-ம் எதிரி சேகர். திருமணத்திற்கு பிறகு காளீஸ்வரி 1 முதல் 3 எதிரிகளுடன் கூட்டுக் குடும்பமாக கதவு எண்.120-E, காந்திஜி நகர், சீரநாயக்கன்பாளையம் என்ற முகவரியில் வாழ்ந்து வந்தார். எதிரிகள் காளீஸ்வரியை அவரது பெற்றோருடன் பேசக்கூடாது என்றும் அவரது பெற்றோர் தங்கள் வீட்டிற்கு வரக்கூடாது என்றும் திட்டியதோடு, காளீஸ்வரி வேலை சரியாக செய்யவில்லை என்றும் அவர் மலடி என்றும் அவரை திட்டி மனரீதியாக துன்புறுத்தி,

தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு கொடுமைபடுத்தினார்கள். மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரிகள் மூவரும், காயத்திரியை தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு திட்டி தற்கொலை செய்துகொள்ள தூண்டியதால் காளீஸ்வரி 24.02.2016 அன்று 'Auramine' என்னும் மஞ்சள் நிற சாணிப்பவுடரை குடித்து தற்கொலை செய்துகொள்ள உடந்தையாக இருந்துள்ளார்கள்.

[1](2)சம்பவம் குறித்து சாட்சி.1 மாணிக்கம், காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். சாட்சி 19 சிவகார்த்திகா, காவல் உதவி ஆய்வாளர் மேற்படி புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். சாட்சி.18 செல்வி மதுராந்தகி, வருவாய் கோட்டாட்சியர் மேற்படி இறந்துபோன காளீஸ்வரியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். சாட்சி.13 மருத்துவர்.பேரானந்தம் இறந்துபோன காளீஸ்வரியின் பிரேதத்தை பரிசோதனை செய்து அதன் உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி, பிரேத பரிசோதனை சான்று மற்றும் இறுதி கருத்துரை வழங்கியுள்ளார். சாட்சி.17 சரவணன், உதவி இயக்குநர், வட்டார தடய அறிவியல் துறை, கோவை அவர்கள் இறந்துபோன காளீஸ்வரியின் உடல் உள்ளுறுப்புகளை ஆய்வு செய்து அறிக்கை வழங்கியுள்ளார். சாட்சி.20 திரு.சுரேஷ்குமார், காவல் உதவி ஆணையர், இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு சாட்சிகள் மாணிக்கம், வத்சலா, தங்கமணி, ராதிகா, ரஞ்சித், சுந்தரி, முருகன், லீலா, கிருஷ்ணவேனி, ருக்மணி, சரவணக்குமார், துரைராஜ், மருத்துவர்.பேரானந்தம், தலைமைக் காவலர்கள் உமாராணி, ஆனந்தன், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்ற தலைமை எழுத்தர் திருமதி.விஜயலட்சுமி, உதவி இயக்குநர் சரவணன் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.மதுராந்தகி [சாட்சிகள் 1 முதல் 18] ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து, எதிரிகள் மீது

WEB COPY

பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது கோயம்புத்தூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1-ல் முன்னுரிமை பதிவு வழக்கு எண்.23/2016 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகள் ஆஜரானவுடன் எதிரிக்கு கு.வி.மு.ச.207 ஆவது பிரிவின் கீழ் குற்றப்பத்திரிகையில் உள்ள நகல்கள் வழங்கப்பட்டு, இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க வழக்கு என்பதால் கோவை முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக கு.வி.மு.ச. 209 பிரிவின் கீழ் அனுப்பப்பட்டு மேற்படி கோவை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்ட பின்பு மேற்கொண்டு கோவை முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவின் பேரில் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு; இந்நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானவுடன் அரசு தரப்பில் ஆஜரான அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதுரைகளைக் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனையப் போதுமான ஆதாரங்கள் உள்ளனவாக இந்நீதிமன்றத்திற்குத் தோன்றியமையால் எதிரிகள் மீது பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிகளுக்கு எடுத்துக் கூறி வினவியபோது எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தனர்.

3. இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிருபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் சாட்சிகள் பட்டியலில் 20 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு அவர்களில் 7 சாட்சிகள் அ.சா 1 முதல் 7 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் 20 வரையான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவோ சான்றாவணங்கள், சான்றுப்பொருள்கள் ஏதும் குறியீடு செய்யப்படவோ இல்லை.

**<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறியவரும் அரசு தரப்பு வழக்கானது:-</u>**

4. அசா.1 மாணிக்கம், அசா.2 வத்சலா என்பவரின் கணவர். அவர்களின் மகன் அசா.3 ரஞ்சித், அசா.1 மற்றும் அசா.2-ன் மகள் காளீஸ்வரி 11-ம் வகுப்பு முடித்துவிட்டு தங்கப்பட்டறையில் வேலைசெய்து வந்தார். 1-ம் எதிரி ஆனந்தகண்ணன் என்பவருக்கும் காளீஸ்வரிக்கும் 02.03.2015 அன்று பெரியவர்கள் ஏற்பாட்டின்படி திருமணம் நடைபெற்றது. 1-ம் எதிரி சீலிங் மற்றும் லேத் வேலை செய்து வந்தார். திருமணத்திற்கு பிறகு 1-ம் எதிரியும், காளீஸ்வரியும் சீரநாயக்கன்பாளையத்தில் தனிக்குடித்தனம் இருந்தார்கள். அவர்கள் தனிக்குடித்தனம் செய்த வீடு 1-ம் எதிரியின் பெற்றோரான 2-வது மற்றும் 3-வது எதிரிகளின் வீட்டிற்கு பக்கத்திலேயே இருந்தது. திருமணத்திற்கு பிறகு சுமார் 3 மாதங்கள் வரை இருவரும் நன்றாக இருந்தார்கள். 24.02.2016 அன்று காளீஸ்வரி சாணிப்பவுடர் குடித்து தற்கொலை செய்து கொண்டதாக 1-ம் எதிரி போன் மூலம் அசா.1-க்கு தகவல் சொன்னார். அசா.1 கோவை அரசு மருத்துவமனைக்கு சென்றார். அதற்கு முன்பாக காளீஸ்வரி இறந்துவிட்டார். அன்று மாலை ஆர்.எஸ்.புரம் காவல்நிலையத்தில் அசா.1 புகார் கொடுத்தார். புகாரை அவர் மகன் ரஞ்சித் எழுதினார். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று அசா.1-க்கு முழுவதுமாக தெரியாது. என்ன காரணத்தால் காளீஸ்வரி தற்கொலை செய்து கொண்டார் என்பதும் காளீஸ்வரிக்கும், 1-ம் எதிரிக்கும் இடையில் ஏதாவது பிரச்சினை இருந்ததா? என்பதும் 1-ம் எதிரி, காளீஸ்வரியை கொடுமைபடுத்தினாரா? என்பதும் அசா.1-க்கு தெரியாது. அசா.1 எதையும் பார்க்கவில்லை. இந்த வழக்கு பற்றி அவருக்கு வேறு எதுவும்

WEB COPY

தெரியாது. புகாரிலுள்ள அசா.1-ன் கையெழுத்து மட்டும் அதசாஆ.1. வருவாய் கோட்டாட்சியர் விசாரணையின் போது அசா.1 இதே விவரங்களைத்தான் கூறினார். வருவாய் கோட்டாட்சியரிடம் அசா.1 அளித்த வாக்குமூலம் அதசாஆ.2.

5. காளீஸ்வரி என்ன காரணத்தால் தற்கொலை செய்து கொண்டார் என்று அசா.2-க்கு தெரியாது. வருவாய் கோட்டாட்சியர் விசாரித்தபோது அவரிடம் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்பது அசா.2-க்கு நினைவு இல்லை. அப்போது அசா.2 மயக்கமாக இருந்தார். வருவாய் கோட்டாட்சியர் பதிவு செய்த வாக்குமூலத்திலுள்ள அசா.2-ன் கையெழுத்து மட்டும் அதசாஆ.3 ஆகும். காளீஸ்வரிக்கும் எதிரிகளுக்கும் இடையில் என்ன பிரச்சினை என்பது அசா.2-க்கு நேரடியாக தெரியாது.

WEB COPY

6. அசா.3 தகவல் கிடைத்து அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது, காளீஸ்வரி இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார்கள். புகாரினை அசா.3 எழுதவில்லை. புகாரிலுள்ள வாக்குமூலங்கள் அடங்கிய கையெழுத்து அவருடையது அல்ல. வருவாய் கோட்டாட்சியர் விசாரித்தபோது 1-ம் எதிரிக்கும் தன் அக்காவிற்கும் அவ்வப்போது சிறுசிறு சண்டைகள் வரும் என்று அசா.3 கூறினார். வருவாய் கோட்டாட்சியரிடம் அசா.3 அளித்த வாக்குமூலத்திலுள்ள அவர் கையெழுத்து மட்டும் அதசாஆ.4.

7. அசா.6 சிவகாத்திகா, காவல் உதவி ஆய்வாளர், 24.02.2016 அன்று தகவலின் பேரில் கோவை, அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை சென்று விபத்து பதிவேட்டு நகல் மற்றும் இறப்பு தகவல் அதசாஆ.11 பெற்று நிலையம் திரும்பி, அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் அதசாஆ.12 பெற்று நிலைய குற்ற எண்.113/2016 ச/பி.174 கு.வி.மு.ச-ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல்

தகவல் அறிக்கை அதசாஆ.13 தயாரித்தார். அதனை வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தார். நகல்களை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தார்.

8. அசா.4 செல்வி.மதுராந்தகி, கோவை, தெற்கு வருவாய் கோட்டாட்சியர் 25.02.2016 அன்று மேற்படி முதல் தகவல் அறிக்கையினை பெற்று இறந்துபோன காளீஸ்வரி என்பவரின் இறப்பு குறித்து விசாரணை மேற்கொண்டார். காளீஸ்வரி என்பவரது இறப்பு வரதட்சனை கொடுமையால் நிகழவில்லை எனவும், அவரது குடும்பத்தில் சில குடும்ப பிரச்சினை இருந்துள்ளதால் மணம் உடைந்து காளீஸ்வரி மஞ்சள் நிற சாணிப்பவுடர் குடித்து இறந்திருக்கலாம் எனவும் கருத்து தெரிவித்து அவர் வழங்கிய அறிக்கை அடங்கிய கோப்பு அதசாஆ.5.

WEB COPY

9. அசா.5 மருத்துவர்.பேரானந்தம், அசா.4 அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அதசாஆ.6 பெற்று 25.02.2016 அன்று கோவை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேற்படி காளீஸ்வரி என்ற பெண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தார். மேற்படி பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்தார். அவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.7. பிறகு கிடைக்கப்பெற்ற இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் அதசாஆ.9 மற்றும் அதசாஆ.10-ன் அடிப்படையில் மேற்படி காளீஸ்வரி மஞ்சள் நிறத்திலான சாணிப்பவுடரை அருந்தியதால் இறப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர் இறுதி கருத்துரை அதசாஆ.8 வழங்கினார்.

10. அசா.7 திரு.ஆர்.சரவணக்குமார், காவல் உதவி ஆணையாளர், 24.02.2016 அன்று மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலை பெற்று சம்பவ இடம் சென்று சாட்சிகள்

சரவணக்குமார் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் அதசாஆ.14 மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ.15 தயாரித்தார். சம்பவ வீட்டின் சமையல் அறையிலிருந்த மஞ்சள் நிற சாணிப்பவுடர் கரையுடன் கூடிய சில்வர் செம்பு ஒன்று (சா.பொ.1) மற்றும் சிறிய பிளாஸ்டிக் கவரில் பாதி அளவு மஞ்சள் நிற சாணிப்பவுடர் (சா.பொ.2) ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.16 மூலம் கைப்பற்றி அவற்றை படிவம்-95 அதசாஆ.17 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பிறகு கோவை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த இறந்துபோன காளீஸ்வரியின் பிரேதத்தை பார்வையிட்டு அசா.1 மற்றும் அசா.2-ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 25.02.2016-ம் தேதி அசா.3 ரஞ்சித் மற்றும் சாட்சிகள் முருகன் மற்றும் நீலா ஆகியோரையும் 26.02.2016 தேதியன்று சாட்சிகள் ஆனந்தக்கண்ணன், சாவித்திரி மற்றும் சேகர் ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். அசா.1 மற்றும் அசா.2-ஐ மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தார். 24.03.2016 அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவை 174 கு.வி.மு.ச-விலிருந்து 498(A) மற்றும் 306 இதச-வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.18 தயாரித்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

WEB COPY

11. பின்பு அசா.7, 27.03.2016 அன்று அசா.3 ரஞ்சித் மற்றும் சாட்சி சுந்தரி ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரிகளுக்கு கோவை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் நிபந்தனை ஜாமீன் வழங்கப்பட்டது. கைப்பற்றிய சான்று பொருள்களை நீதிமன்றத்தின் மூலமாக இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்தார். பிரேத பரிசோதனை செய்த மருத்துவரையும், பிரேத விசாரணை மேற்கொண்ட வருவாய் கோட்டாட்சியரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார்.

12. மருத்துவர்.பிரசன்னக்குமார் வழங்கிய மருத்துவ நமூனா மற்றம் விபத்து பதிவேட்டு நகல் (அதசாஆ.19 மற்றும் அதசாஆ.20) ஆகியவற்றை பெற்று, புலன் விசாரணை முடித்து 11.05.2016 அன்று, அசா.7, எதிரிகள் மீது சட்டப்பிரிவு 498(A) மற்றும் 306 இதச பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

13. அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுள்ளனர்.

14. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

WEB COPY

15. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகளைப் பற்றி எதிரிகளுக்கு எடுத்துக் கூறி கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டபோது எதிரிகள் சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் என மறுத்தனர். எதிரிகள் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**<u>பிரச்சினை:</u>**

16. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்னை யாதெனில், எதிரிகள் மீதான, பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் படியான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் எந்தவொரு தகுநிலை ஐயப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

17. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் 20 வரையான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது.

**<u>இருதரப்பு வாதுரைகள்:</u>**

18. கற்றறிந்த அரசுத்தரப்பு கூடுதல் வழக்கறிஞர், அசா.4 முதல் அசா.7-ன் சாட்சியங்கள் மூலமாக அரசுத்தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அதசாஆ.1 முதல் அதசாஆ.20 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் சான்று பொருள்கள் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவையும் அரசுத்தரப்பு வழக்கை உறுதிப்படுத்துவதாக உள்ளது என்றும் ஆகவே 1 முதல் 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

19. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அசா.1 முதல்அசா.3 சாட்சிகள், 1-ம் எதிரி அவர் மனைவியான காயத்திரியை கொடுமைப்படுத்தவில்லை என்றும் இருவரும் சந்தோசமாகத்தான் வாழ்ந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அசா.1 முதல் அசா.3 பிறழ் சாட்சிகளாக மாறி உள்ள சூழ்நிலையில் அசா.4 முதல் அசா.7 சாட்சிகளான அதிகாரிகளின் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக வைத்து கொண்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க முடியாது என்றும் 1-ம் எதிரி அவர் மனைவியை கொடுமைப்படுத்தினார் என்பதற்கும் தற்கொலை செய்துகொள்ள தூண்டினார் என்பதற்கும் தகுந்த சாட்சியங்கள் அரசுத்தரப்பில் முன் வைக்கப்படவில்லை என்றும் ஆகவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

WEB COPY

20. இவ்வழக்கு சம்பவத்தில் 1-ம் எதிரி ஆனந்தகண்ணன் என்பவரின் மனைவி காளீஸ்வரி “Auramine” என்னும் மஞ்சள் நிற சாணிப்பவுடர் குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்பது அசா.5 மருத்துவர்.பேரானந்தம் சாட்சியம் மூலமாகவும் மற்றும் அதசாஆ.7 பிரேத பரிசோதனை சான்று, அதசாஆ.8 இறுதி கருத்துரை, அதசாஆ.9 மற்றும் அதசாஆ.10 இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் ஆகியவற்றின் மூலமாகவும் தெளிவாகின்றது. ஆகவே காளீஸ்வரியின் மரணம் தற்கொலை என்பதில் எவ்வித ஆட்சேபனையும், சந்தேகமும் இல்லை.

21. காளீஸ்வரியின் மரணம் குறித்து அவர் தந்தை அசா.1 மாணிக்கம், காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். ஆனால் மேற்படி புகாரை ஒத்துரைத்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அசா.1 முன்வரவில்லை. புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது என்றும் காளீஸ்வரி என்ன காரணத்தால் தற்கொலை செய்துகொண்டார் என்பது தனக்கு தெரியாது என்றும் அசா.1 சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே புகாரிலுள்ள அசா.1-ன் கையெழுத்து மட்டும் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகாரை தன் மகன் ரஞ்சித் (அசா.3) எழுதியதாக அசா.1 தெரிவித்திருந்தாலும், அசா.3 தன் சாட்சியத்தில் புகாரில் உள்ள வாசகங்கள் அடங்கிய கையெழுத்து தன்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்து, அசா.1-ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே அதசாஆ.12 புகார் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

22. இறந்த காளீஸ்வரியின் பெற்றோர் மற்றும் சகோதரரான அசா.1 முதல் அசா.3, என்ன காரணத்தால் காளீஸ்வரி தற்கொலை செய்து கொண்டார் என்பது தங்களுக்கு தெரியாது என்றும் காளீஸ்வரிக்கும் எதிரிகளுக்கும் இடையில் என்ன பிரச்சினை என்பது தங்களுக்கு நேரடியாக தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக

WEB COPY

மாறியுள்ளார்கள். நீதிமன்றத்தில் கூறியதுபோலதான் வருவாய் கோட்டாட்சியரிடமும் வாக்குமூலம் அளித்ததாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எதிரிகள், காளீஸ்வரியை மலடி என்று திட்டி மனரீதியாக கொடுமைபடுத்தியதாகவோ அல்லது அவரை தற்கொலை செய்துகொள்ள தூண்டியதாகவோ அசா.1 முதல் அசா.3 சாட்சியம் அளிக்கவில்லை. 1-ம் எதிரியும், காளீஸ்வரியும் திருமணத்திற்கு பிறகு நன்றாகத்தான் குடும்பம் நடத்தினார்கள் என்றும் அவர்களுக்கிடையில் சிறுசிறு சண்டை வரும் என்றும் மட்டுமே அசா.1 முதல் அசா.3 சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆகவே அசா.1 முதல் அசா.3-ன் சாட்சியங்கள் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கக்கூடிய வகையில் அமையவில்லை என்பது தெளிவாகின்றது.

WEB COPY

23. அசா.4 வருவாய் கோட்டாட்சியர், தனது விசாரணையில் காளீஸ்வரி என்பவரது இறப்பானது அவர் குடும்பத்தில் சில குடும்ப பிரச்சினைகள் இருந்துள்ளதால் மனம் உடைந்து காளீஸ்வரி மஞ்சள் நிற சாணிப்பவுடர் குடித்து இறந்திருக்கலாம் என்று தெரியவந்ததாக, தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். வரதட்சனை கொடுமை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். அவரிடம் அசா.1 முதல் அசா.3 அளித்த வாக்குமூலங்கள் மேற்படி சாட்சிகளால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அசா.5 மருத்துவர் பிரேத பரிசோதனை மேற்கொண்டுள்ளார். அசா.6 காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அசா.7 காவல் உதவி ஆணையாளர் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சாட்சிகள் சம்பவம் பற்றி நேரில் அறிந்த சாட்சிகள் இல்லை. தனிப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கக்கூடியதாக அமையவில்லை என்ற சூழ்நிலையில், மேற்படி அதிகாரிகளின் சாட்சியங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது.

24. இவ்வழக்கில் எதிரிகள் 1 முதல் 3, காளீஸ்வரியை திட்டி மனரீதியாக கொடுமைபடுத்தினார்கள் என்பதையும் அவரை தற்கொலை செய்துகொள்ள தூண்டி அவர் தற்கொலை செய்துகொள்ள உடந்தையாக இருந்தார்கள் என்பதையும் நிரூபிக்க அரசுத்தரப்பில் தகுந்த போதுமான சாட்சியங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. ஆகவே எதிரிகள் 1 முதல் 3 மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசுத்தரப்பு தவறியுள்ளது என்பது தெளிவாகின்றது.

25. மேற்கூறிய காரணங்களால், அரசுத்தரப்பில் எதிரிகள் 1 முதல் 3 மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் எந்த ஒரு தகுநிலை ஐயப்பாட்டிற்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து அவ்வாறே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

WEB COPY

26. முடிவாக, அரசு தரப்பில் எதிரிகள் 1 முதல் 3 மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 498(A) மற்றும் 306 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள், எந்தவொரு தகுநிலை ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி நிருபிக்கப்படவில்லை என முடிவு செய்து, 1 முதல் 3 எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1 முதல் 3 எதிரிகளை அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து கு.வி.மு.ச. 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

27. இவ்வழக்கில் பி.ஆர்.எண். 25/2016-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குச் சொத்தான சா.பொ.1 மஞ்சள் நிற சாணிப்பவுடர் கறையுடன்கூடிய சில்வர் (Stainless Steel) செம்பு ஒன்று, சா.பொ.2 சிறிய பிளாஸ்டிக் கவரில் பாதி அளவு உள்ள மஞ்சள்நிற சாணிப்பவுடர், ஆகியவற்றை மேல் முறையீட்டுக் காலத்திற்குப் பின்

அழிக்கவும் அல்லது மேல் முறையீடு இருப்பின் அதன் முடிவிற்கேற்ப செயல்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2017-ஆம் ஆண்டு மே மாதம் 08-ம் நாள் அவையறியபகரப்பட்டது.

-Sd.A.Manimozhi-

அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்
கோயம்புத்தூர்.

WEB COPY

அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்

| | |
|---|---|
| அ.சா. 1 | மாணிக்கம் |
| அ.சா. 2 | வத்சலா |
| அ.சா. 3 | ரஞ்சித் |
| அ.சா.4 | செல்வி. மதுராந்தகி, வருவாய் கோட்டாட்சியர் |
| அ.சா.5 | மருத்துவர். பேரானந்தம் |
| அ.சா.6 | திருமதி. சிவகார்த்திகா, காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.7 | திரு.சுரேஷ்குமார், காவல் உதவி ஆணையாளர் |

எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் - இல்லை

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.த.சா.ஆ.1 | 17-02-2017 | புகாரிலுள்ள அசா.1-ன் கையொப்பம் |
| 2 | அ.த.சா.ஆ.2 | 25.02.2016 | வருவாய் கோட்டாட்சியரிடம் அசா.1 கொடுத்த வாக்குமூலம் |
| 3 | அ.த.சா.ஆ.3 | 25.02.2016 | வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த |

| | | | |
|---|---|---|---|
| | | | வாக்குமூலத்திலுள்ள அசா.2-ன் கையொப்பம் மட்டும் |
| 4 | அ.த.சா.ஆ.4 | 25.02.2016 | வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த வாக்குமூலத்திலுள்ள அசா.3-ன் கையொப்பம் மட்டும் |
| 5 | அ.த.சா.ஆ.5 | 25.02.2016 | வருவாய் கோட்டாட்சியர் வழங்கிய அறிக்கை அடங்கிய கோப்பு |
| 6 | அ.த.சா.ஆ.6 | 25.02.2016 | பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் |
| 7 | அ.த.சா.ஆ.7 | 25.02.2016 | பிரேத பரிசோதனை சான்று |
| 8 | அ.த.சா.ஆ.8 | 25.02.2016 | இறுதி கருத்துரை |
| 9 | அ.த.சா.ஆ.9 | 29.04.2016 | இரசாயன பகுப்பாய்வு அறிக்கை |
| 10 | அ.த.சா.ஆ.10 | 21.03.2016 | இரசாயன பகுப்பாய்வு அறிக்கை |
| 11 | அ.த.சா.ஆ.11 | 24.02.2016 | மருத்துவமனையிலிருந்து பெற்ற இறப்புத் தகவல் |
| 12 | அ.த.சா.ஆ.12 | 24.02.2016 | புகார் |
| 13 | அ.த.சா.ஆ.13 | 24.02.2016 | முதல் தகவல் அறிக்கை |
| 14 | அ.த.சா.ஆ.14 | 24.02.2016 | பார்வை மகஜர் |
| 15 | அ.த.சா.ஆ.15 | 24.02.2016 | மாதிரி வரைபடம் |
| 16 | அ.த.சா.ஆ.16 | 24.02.2016 | கைப்பற்றுதல் மகஜர் |
| 17 | அ.த.சா.ஆ.17 | 24.02.2016 | படிவம்-95 |
| 18 | அ.த.சா.ஆ.18 | 24.03.2016 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| 19 | அ.த.சா.ஆ.19 | 24.02.2016 | மருத்துவ நமூனா |
| 20 | அ.த.சா.ஆ.20 | 24.02.2016 | விபத்து பதிவேட்டு நகல் |

WEB COPY

அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருட்கள் -

| | |
|---|---|
| சா.பொ. 1 | மஞ்சள் நிற சாணிப்பவுடர் கறையுடன்கூடிய சில்வர் (Stainless Steel) செம்பு ஒன்று |
| சா.பொ. 2 | சிறிய பிளாஸ்டிக் கவரில் பாதி அளவு உள்ள மஞ்சள்நிற சாணிப்பவுடர் |

எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள்கள் - இல்லை.

-Sd.A.Manimozhi-
அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்
கோயம்புத்தூர்.

<u>குறிப்பு</u>:

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப் படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

WEB COPY

WEB COPY

COPY OF JUDGEMENT
SC.193/2016
DATE:08.05.2017
MAHILA COURT,CBE